# காலை முரசு

பக்கங்கள் - 17

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2054 புரட்டாதி 21 ஞாயிற்றுக்கிழமை 08.10.2023 அதிர்வு 68


## தேர்தல் முறையில் திடீரென மாற்றம்

**அமைச்சரவைப் பத்திரம் சமர்ப்பிப்பு**

நாடாளுமன்றத் தேர்தல் முறைமையை மாற்றியமைப்பதற்கான அரசமைப்புத் திருத்தத்தை மேற்கொள்வதற்கான விசேட அமைச்சரவைப் 05



## விரைவில் தீர்வு காண பேச்சு நடத்தவுள்ளேன்

**சர்வதேசத்தை நாட வேண்டிய தேவை இல்லை; மட்டக்களப்பில் ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு**

- சுடர் திலீபன் -

"இன மற்றும் மதப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணாமல் ஒரு நாடு என்ற வகையில் முன்னோக்கிச் செல்ல முடியாது என்பதால், விரைவில் அதற்குரிய தீர்வுகளைக் காண்பதற்காக அனைத்து தலைவர்களுடனும் பேச்சுகளை நடத்தவுள்ளேன்." 05

## சர்வதேச விசாரணைக்கு இடமளிக்காவிடின்

# ராஜபக்ஷக்களின் கதியே ரணிலுக்கும்



**எச்சரிக்கின்றார் சம்பந்தன்**

- சீ.ஏ. தமிழ்மாறன் -

"ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சர்வதேச விசாரணைகளுக்கு இடமளிக்க வேண்டும். இல்லையேல் கடந்த ஆட்சியில் இருந்த ராஜபக்ஷக்களுக்கு என்ன நடந்ததோ அதே நிலைமைதான் அவருக்கும் ஏற்படும்."

- இவ்வாறு எச்சரிக்கை விடுத்துள்ளார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"இலங்கை மீதான ஐ.நா. உரிமைகள் சபையின் தீர்மானங்களை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நிராகரிக்க முடியாது. மைத்திரி - ரணில் தலைமையிலான நல்லாட்சி அரசு ஐ.நா. தீர்மானத்துக்கு இணை அனுசரணை வழங்கியதை அவர் மறக்கவும் கூடாது. எனவே, ஐ.நா. தீர்மானங்களின் பரிந்துரைகளை அவர் அமுல்படுத்தியே ஆக வேண்டும். 04

## மன்னாரில் பொலிஸாரின் விரலைக் கடித்துவிட்டு தப்பியோடிய அம்புலன்ஸ் சாரதி பாம்பனில் கைது!



- எஸ்.நிதர்ஷன் -

மன்னர் அரச மருத்துவமனை அம்புலன்ஸில் ஐஸ் போதைபொருள் கடத்தி விற்பனை செய்த அம்புலன்ஸ் சாரதியை மன்னார் பொலிஸார் கைது செய்து விசாரித்தபோது பொலிஸ் உத்தியோகத்தரின் கட்டை விரலைக் கடித்து விட்டு பொலிஸ் நிலையத்தில் இருந்து தப்பிய நபர் நேற்றுக் காலை பாம்பன் – குந்துகால் கடற்கரை அருகில் வைத்து மரைன் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

இராமநாதபுரம் மாவட்டம், பாம்பன் – குந்துகால் கடற்கரை அருகே நேற்றுமுன்தினம் இரவு இலங்கையிலிருந்து சட்டவிரோதமாக இந்திய படகில் வந்து இறங்கிய இலங்கை நபரை அப்பகுதியில் உள்ள பொதுமக்கள் சந்தேகத்தின் பேரின் மண்டபம் மரைன் பொலிஸாருக்குத் 04

## ஒலுவிலில் மின்னல் தாக்கி குடும்பஸ்தர் பரிதாப மரணம்

**மூவர் வைத்தியசாலையில் சேர்ப்பு**



(அஸ்ஹர் ஆதம், அ.அஸ்வர், எம்.எம்.றம்ஸீன்)

அம்பாறை மாவட்டம், ஒலுவிலில் மின்னல் தாக்கியதில் குடும்பஸ்தர் ஒருவர் சம்பவ இடத்திலேயே சாவடைந்துள்ளார். அதே வேளை, பாதிப்புக்குள்ளான மூவர் 04





## இரகசியம்

வெளிநாட்டு நண்பர் ஒருவர் – வாசகர் – அழைப்பு எடுத்தார். நியாயமான கேள்வி ஒன்றை முன் வைத்தார்.

"நஸீர் அஹமட்டின் பதவியைப் பறிக்க வழி செய்யும் வரலாற்றுத் தீர்ப்பை உயர் நீதிமன்றம் வழங்கி 05

# தந்தையையும், அத்தையையும் கொலை செய்த இளைஞன்!

30 வயதான இளைஞன் ஒருவர் தனது தந்தை மற்றும் அத்தையைத் தாக்கி கொலை செய்துள்ளார் என எஹெலியகொடை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நேற்றுக் காலை இந்தக் கொலைச் சம்பவம் நடந்துள்ளது. சம்பவத்தில் எஹெலியகொடை விஜேநாயக்க மாவத்தையில் வசித்து வந்த 70 வயதான நபரும் அவரது 68 வயதான தங்கையுமே கொல்லப்பட்டுள்ளனர்.

கொலையான நபரின் மகன், கை, கால்களால் தாக்கி இந்த கொலைகளை செய்துள்ளார். கொலையுடன் தொடர்புடைய சந்தேக நபரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

மகனின் தாக்குதலுக்கு உள்ளான தந்தை சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளமையுடன் பெண் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார்.

சம்பவம் தொடர்பாக எஹெலியகொடை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.



# இராவணல்ல பகுதி விபத்தில் ஓட்டோவில் பயணித்தவர் பலி

எல்ல – வெல்லவாய பிரதான வீதியில் இடம்பெற்ற விபத்தில் ஒருவர் உயிரிழந்தமையுடன், மேலும் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

இந்த விபத்து, நேற்றுக் காலை இராவணல்ல பகுதியில் இடம்பெற்றுள்ளதாக எல்ல பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்தில் ஓட்டோவும் பாரவூர்தியும் நேருக்கு நேர் மோதியுள்ளன.

விபத்தில் ஓட்டோவில் பயணித்த 70 வயதுடைய நபர் உயிரிழந்துள்ளார் என பொலிஸார் உறுதிபடுத்தியுள்ளனர்.

ஓட்டோச் சாரதி படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார்.

இந்த விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை எல்ல பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.

## பஸ்ஸின் மீது மரம் வீழ்ந்த விபத்து: மூவருக்கும் தொடர்ந்தும் சிகிச்சை

கொள்ளுப்பிட்டியில் பஸ் மீது மரம் முறிந்து வீழ்ந்ததில் காயமடைந்தவர்களில் மூவர் தொடர்ந்தும் தேசிய வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நேற்று முன்தினம் காலை இடம்பெற்ற அனர்த்தத்தில் 5 பேர் உயிரிழந்திருந்தனர்.

கொழும்பு – கொள்ளுப்பிட்டி, டுப்ளிகேசன் வீதியில் நேற்று முன்தினம் காலை 6.05 அளவில் மத்துகமவில் இருந்து வந்திருந்த பஸ் மீது மரம் முறிந்து வீழ்ந்ததில் இந்த விபத்து நேர்ந்தது.

இந்த விபத்தில் உயிரிழந்த 5 பேரில் பேலியகொட – பராக்கிரம மாவத்தையை சேர்ந்த 61 வயதான பாலகிருஷ்ணன் சுப்ரமணியம் ஒருவராவார்.

பாலகிருஷ்ணன் சுப்ரமணியத்தின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் 9 ஆம் திகதி மாதம்பிட்டி பொது மயானத்தில் நடைபெறவுள்ளன.

வெலிசறை – தொடுபல பகுதியை சேர்ந்த 30 வயதான அருண பெர்னாண்டோவும் இந்த விபத்தில் உயிரிழந்துள்ளார்.

தனியார் பிரிவில் பணிபுரிந்து வரும் அருண பெர்னாண்டோ, வேலைக்கு சென்று கொண்டிருந்த போது இந்த விபத்தில் சிக்கியுள்ளார்.

உயிரிழந்த ஐவரில் மாத்தளையை சேர்ந்த 31 வயதான சுரேஷ் ரத்நாயக்கவும் உள்ளடங்குகின்றார்.

அங்குறகம பிரதேசத்தை சேர்ந்த 35 வயதான சதுங்ரங்க மற்றும் கொழும்பு 13-ஐ சேர்ந்த 54 வயதான பிரியஞ்சனா ஆகியோரும் விபத்தில் உயிரிழந்துள்ளனர்.

## பதுளையில் கஞ்சா பயிரிட்டவர் கைது!



பதுளையில் கஞ்சா பயிர்ச் செய்கையில் ஈடுபட்ட 68 வயதுடைய ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்த நபர் 4,340 கஞ்சா செடிகளை பயிரிட்டுள்ளார் எனப் பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர் எம்பிலிபிடிய பகுதியை சேர்ந்த 68 வயதுடைய நபராவார். தனமல்வில பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

### யாழ். பிறவுண் வீதி, கலட்டிச் சந்தியை அண்மித்து

# குப்பை கொட்டுவோரின் காணொலிகளை வெளியிடத் தயாராகின்ற இளையவர்கள்!



யாழ்ப்பாணம் – பிறவுண் வீதி, கலட்டிச் சந்தியை அண்மித்த, சன நடமாட்டம் அதிகமுள்ள புளியடிப் பகுதியில் அத்துமீறிக் குப்பைகளைக் கொண்டுவந்து போடுபவர்களின் விவரங்களை அந்தப் பகுதியில் வதியும் இளையவர்கள் சமூக வலைத் தளங்களில் காணொலி ஆதாரங்களுடன் வெளியிடத் தயாராகி வருகின்றனர்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் விடுதிகள், யாழ்ப்பாணம் தொழில் நுட்பக் கல்லூரி மற்றும் யாழ்ப்பாணம் பல்கலைக்கழகக் கல்லூரி ஆகியவற்றை அண்மித்த இந்தப் பகுதி மாணவர்கள் மற்றும் பொது மக்கள் அதிகமாக நடமாடும் இடமாகும். இந்தப் பகுதியில் அத்துமீறிக் குப்பைகளைக் கொட்டுபவர்களால் அங்கு வதிபவர்களும், பல்கலைக்கழக, தொழிநுட்பக் கல்லூரி மற்றும் பல்கலைக் கழகக் கல்லூரி மாணவர்களும் பெரும் அசௌகரியங்களுக்கு உள்ளாகின்றனர்.

வெளியிடங்களில் இருந்து வாகனங்களில் கொண்டுவந்து குப்பைகளையும், கழிவுகளையும் பலர் இந்த வீதியில் வீசி விட்டுச் செல்கின்றனர். அவை வீதிக்குக் குறுக்காக விலங்குகளால் இழுத்து விடப்படுவதனால் நடந்து செல்வோர் உட்படப் பலர் இடையூறுக்கு உள்ளாக வேண்டியுள்ளனர் எனவும், மனிதக் கழிவுகள் உட்பட வெறுக்கப் படத்தக்க கழிவுகளை வீசுவதனால் அவை துர்நாற்றம் வீசுவதோடு, சுகாதாரச் சீர்கேடுகளை எதிர் நோக்க வேண்டி இருப்பதாகவும் பலர் விசனம் தெரிவித்துள்ளனர்.

இதுபற்றி நல்லூர் பிரதேச சபையினருக்கு அறிவிக்கப்பட்டு, பிரதேச சபையினர் தினமும் அவற்றை அகற்றி வருகின்ற போதிலும், வார இறுதி நாள்களில் வாகனங்களில் வரும் பிரபல வைத்தியர்கள், அதிகாரிகள் உட்படப் பலர் தம்முடன் எடுத்துவரும் குப்பைப் பொதிகளை வீசி விட்டுச் செல்வதைப் பிரதேசவாசிகள் அவதானித்துள்ளனர். இவ்வாறானவர்களை சமூக வலைத் தளங்களுக்கு ஊடாக அம்பலப்படுத்தவுள்ளனர் எனத் தெரிவிக்கின்றனர்.

எனினும் அவர்களின் நற்பெயருக்குக் களங்கம் ஏற்படுத்தாத வகையில் இத்தகவலை நேர்ச்த்தோடு எச்சரித்த பின்னரும் இத்தகைய இழிசெயலைச் செய்வோரை அம்பலப்படுத்தவுள்ளனர் எனஅந்தப் பகுதியைச் சேர்ந்த இளையோர் குறிப்பிட்டுள்ளனர்.



## சர்வதேச நீதிப் பொறிமுறைக்கான கதவைத் திறக்க

# சபையின் உள்ளும் புறமும் தொடர்ந்து போராட வேண்டும் தமிழ் எம்.பிக்கள்!



## சபா. குகதாஸ் கோரிக்கை

- எஸ்.நிதர்ஷன் -

தமிழ் எம்.பிமார் சபையின் உள்ளும், புறமும் தொடர்ந்து போராட வேண்டும் என முன்னாள் வடக்கு மாகாண சபை உறுப்பினர் சபா. குகதாஸ் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்,

"மிழ்த் தேசியக் கட்சிகளின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் நாடாளுமன்றத்தில் வெற்றுக் கதிரைகளைப் பார்த்து பேசுவதைஎதிர்வரும்நாட்களில்குறைத்து ஒற்றுமையாக சபையின் உள்ளும் புறமும் தொடர்ந்து போராடத் தயாராக வேண்டும். 75 ஆண்டுகளாகப் பேசுகின்றோம், ஆனால் மாற்றத்துக்குப் பதிலாக மக்களுக்குக் கிடைத்தது அநீதி தான்.

நாடாளுமன்றத்திலும் ஒற்றுமை இன்மையைக் காட்டிக் கொடுக்காமல் சுயலாப நோக்கில் செயற்படாமல் ஒற்றுமையே பலம் என்ற நோக்கில் களத்தில் இறங்குங்கள் செயலில் காட்டுங்கள்.

பாதிப்பின் உச்சத்தில் விரக்தி நிலையில் வாழும் வடக்கு – கிழக்கு மாகாண பெரும்பான்மைத் தமிழ் மக்களின் மனநிலையை விளங்கிக்கொண்டு தொடர்ந்து போராட்டங்களை அறிவித்து பலவீன நிலையை வெளிப்படுத்தாது மக்கள் போராட்டங்களை அறிவித்து அரசியல் இருப்புக்கான குளிர்காய்தலைத் தவிர்த்து ஆக்கபூர்வமாக சர்வதேச நாடுகளின் அதன் ஊடகங்களின் கவனத்தைத் திசை திருப்பப் போராட்டக்களமாக நாடாளுமன்றத்தின் சபையின் மையப் பகுதியையும், நாடாளுமன்ற முகப்பு வாயிலையும், ஐ.நா. வதிவிடப் பிரதிநிதியின் வாசஸ்தலத்தின் வாசலையும், முதன்மையான நாடுகளின் தூதரக வாசலையும் மாற்ற வேண்டும்.

உள்ளக நீதிப் பொறிமுறையில் நாட்டு மக்கள் நம்பிக்கை இழந்துள்ளனர் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ கூறிய விடயம் மிக முக்கியமானது. தமிழர் தரப்பு அதனை வலுப்படுத்தி சர்வதேச நீதிப் பொறிமுறைக்கான கதவைத் திறக்க தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தொடர்ந்தும் போராடுவதன் மூலமே மாற்றத்தைக் கொண்டுவரலாம். இத்தகைய போராட்டம் நாட்கள் கழிய பல எதிர்க்கட்சி நாடாளுமன்றஉறுப்பினர்களையும்இணைப்பதற்கான வழியைத் திறக்கும்.

தனித்து ஓடினால் மக்கள் நன்றாக இரசிப்பார்கள், வாக்கு வங்கி அதிகரிக்கும் என நினைக்கும் பிற்போக்கு சிந்தனையைத் தவிர்த்து சகலரையும் ஒன்றிணைத்துப் போராட முன்வாருங்கள் தமிழ்த் தேசியக் கட்சிகளின் நாடாளுமன்ற உறுப்பினர்களே. இத்தகைய செயற்பாடே நீதிக்கான வழியை திறக்கும்." – என்றார்.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

**மன்னாரில் பொலிஸாரின்...**

தகவல் கொடுத்தனர்.

தகவலின் அடிப்படையில் மரைன் பொலிஸார் இலங்கை நபரைப் பிடித்து மண்டபம் மரைன் பொலிஸ் நிலையத்தில் வைத்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

மன்னார் மாவட்டம், பேசாலை பகுதியைச் சேர்ந்தவ தேவராஜன் (வயது 43) என்பவரே கைது செய்யப்பட்டு விசாரணைக்குட்படுத்தப்பட்டு வருகின்றார் மரைன் பொலிஸார் தெரிவித்தனர்.

இவர் கடந்த 1990 ஆம் ஆண்டு தனது குடும்பத்துடன் தனுஷ்கோடி வழியாக அகதியாக வந்து மண்டபம் அகதிகள் முகாமில் தங்கி இருந்து பின்னர் 1996 ஆம் ஆண்டு கப்பல்கள் மூலம் இராமேஸ்வரத்தில் இருந்து மீண்டும் இலங்கைக்கு வந்துள்ளார்.

தேவராஜன் மன்னார் மாவட்டத்தில் உள்ள அரச மருத்துவமனையில் அம்புலன்ஸ் சாரதியாகப் பணி புரிந்த நிலையில் கடந்தமாதம்அரசமருத்துவமனைஊழியர் இரத்தினம் என்பவருடன் சேர்ந்து சுமார் 176 கிராம் ஐஸ் போதைபொருளை அம்புலன்ஸ் வாகனத்தில் கடத்தி வந்து விற்பனை செய்தபோது இருவரையும் மன்னார் – முருங்கன் பொலிஸ் நிலையப் பொலிஸார் கைது செய்து விசாரணை செய்தபோது தேவராஜன் விசாரணை செய்த பொலிஸ் உத்தியோகத்தரின் கட்டை விரலைக் கடித்து விட்டு அங்கிருந்து தப்பியோடியுள்ளார்.

தேவராஜனை மன்னர் – முருங்கன் பொலிஸ் நிலையப் பொலிஸார் தேடி வந்த நிலையில் நேற்றுமுன்தினம் மாலை 6 மணியளவில் தலைமன்னாரிலிருந்து கடல் வழியாக சட்டவிரோதமாக ஒரு இலட்சத்து ஐம்பதாயிரம் ரூபா பணம் கொடுத்து பைபர் படகில் புறப்பட்டு தனுஷ்கோடி அடுத்துள்ள மணல் திட்டில் இறங்கியுள்ளார்.

பின்னர் தங்கச்சிமடம் சூசையப்பர் பட்டினத்தைச் சேர்ந்த சந்தியா டைமன் என்பவர் நாட்டுப் படகில் தேவராஜனை அழைத்து வந்து பாம்பன் குந்துகால் கடற்கரை அருகே இறக்கி விட்டுச் சென்றார் என்று தேவராஜன் மரைன் பொலிஸாரிடம் தெரிவித்துள்ளார்.

இதையடுத்து மத்திய, மாநில உளவுத்துறை அதிகாரிகள் தேவராஜனுக்கு ஐஸ் போதைப்பொருள் தமிழகத்தில் இருந்து கடத்திய நபர்கள் உதவியுடன் தனுஷ்கோடி வழியாக தமிழகத்துக்குள் சட்டவிரோதமாக ஊடுருவினாரா என்ற கோணத்தில் விசாரணை நடத்தி வருகின்றனர்.

தேவராஜன் மீது சட்டவிரோதமாகக் கடவுச்சீட்டு இல்லாமல் இந்தியாவுக்குள் ஊடுருவினார் என்று வழக்குப் பதிவு செய்த மரைன் பொலிஸார், விசாரணைக்குப் பின் அவரை இராமேஸ்வரம் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி புழல் சிறையில் அடைக்க நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

**ராஜபக்ஷக்களின்...**

இறுதிப் போரில் இடம்பெற்றதாகக் கூறப்படும் போர்க்குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் சர்வதேச விசாரணை நடத்தப்பட வேண்டும். உயிர்த்த ஞாயிறு தினக் குண்டுத் தாக்குதல் குறித்தும் சர்வதேச விசாரணை நடத்தப்பட வேண்டும். முல்லைத்தீவு மாவட்ட நீதிபதிக்கு (ரி.சரவணராஜா) இழைக்கப்பட்ட அநீதிக்கு எதிராகவும் சர்வதேச விசாரணை நடத்தப்பட வேண்டும்.

இந்த நாட்டில் சர்வதேச விசாரணைகள் நடந்தால்தான் உண்மைகள் வெளிவரும் பாதிக்கப்பட்ட தரப்பினருக்கு நீதி கிடைக்கும்.

சர்வதேச விசாரணையே இந்த நாட்டில் இன,மதநல்லிணக்கத்துக்குவழிவகுக்கும். இல்லையேல் அனைவரும் சந்தேகங்களுடன் வாழ வேண்டிய நிலையே ஏற்படும்.

சர்வதேச விசாரணைகளுக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இடமளிக்காவிடின் கடந்த ஆட்சியில் இருந்த ராஜபக்ஷக்களுக்கு என்ன நடந்ததோ அதே நிலைமைதான் அவருக்கும் ஏற்படும்." – என்றார்.

**ஒலுவிலில் மின் தாக்கி...**

வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

ஒலுவில் வெளிச்ச வீட்டுக்கு அருகாமையில் கடலில் மீன் பிடித்துக் கொண்டிருந்த வேளையில் இவர்கள் மின்னல் தாக்கத்துக்குள்ளாகியுள்ளனர்.

ஒலுவில் 2 ஆம் பிரிவைச் சேர்ந்த ஐந்து பிள்ளைகளின் தந்தையான.சுபைதீன் நிஜாமுதீன் (வயது 34) எனும் குடும்பஸ்தரே சம்பவத்தில் உயிரிழந்துள்ளார்.

மின்னல் தாக்கத்துக்குள்ளான ஏனைய மூவருமான ஒலுவில் 7 ஆம் பிரிவைச் சேர்ந்த இல்முதீன் (வயது 32), ஒலுவில் 2 ஆம் பிரிவைச் சேர்ந்த எஸ். எம் அஹமட் (வயது 50), ஒலுவில் 4 ஆம் பிரிவைச் சேர்ந்த கே.அஸ்மின் (வயது 36) ஆகியோர் ஒலுவில் பிரதேச வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டனர்.

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

## இரகசியம் பரகசியம்...

இருப்பது உண்மைதான். ஆனால் இந்தத் தீர்ப்பு ஜனாதிபதி சட்டத்தரணி சுமந்திரனின் வாதத்திற்குக் கிடைத்த பிரத்தியேக வெற்றி என்பது போல உங்கள் பத்திரிகை உட்பட சில ஊடகங்கள் செய்தி வெளியிட்டு இருக்கின்றனவே. இது நியாயமானதா? வழக்கின் எதிர்மனுதாரர்களுக்காக சுமந்திரன் மட்டுமல்லர், மேலும் ஜனாதிபதி சட்டத்தரணி கலாநிதி ரொமேஷ் டி சில்வா உட்பட மேலும் நான்கு, ஐந்து ஜனாதிபதி சட்டத்தரணிகள் வாதிட்டிருக்கின்றனரே... அப்படி இருக்கையில், அது எப்படி சுமந்திரனுக்குத் தனிக் 'கிரெடிட்' வழங்க முடியும்?" – என்று பட்டவர்த்தனமாக கேட்டார் அவர்.

நல்ல கேள்வி. நியாயமான கேள்வியும் கூட. வழக்குகள், சட்ட விவகாரங்களைச் செய்தி அறிக்கையிடும் நீண்ட கால அனுபவம் எனக்கு உண்டு. 1979இல் 19 வயதில் ஹல்ஸ்டோர்பில் நீதிமன்றச் செய்தியாளனாகக் களமிறங்கியவன் நான். அந்த நண்பருக்குச் சில விடயங்களைத் தெளிவாக விளக்கினேன். அவை நம் வாசகர்களுக்கும் நல்ல தீனியாகும் என்பதால் இங்கு பகிர்கிறேன்.

இந்த வழக்கில் முதல் எதிர்மனுதாரர் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சி. இரண்டாவது எதிர்மனுதாரர் கட்சியின் தலைவர் ரவூப் ஹக்கீம். எட்டாவது எதிர்மனுதாரர் கட்சியின் செயலாளர் நிஸாம் காரியப்பர். இந்த மூன்று தரப்பினருக்காக மட்டுமே சுமந்திரன் நீதிமன்றத்தில் முன்னிலையாகி வாதிட்டார். இந்த மூன்று தரப்பினரையும் தவிர 88 எதிர்மனுதாரர்கள் அக்கட்சியின் உயர் பீட உறுப்பினர்கள். மேலும் நாடாளுமன்றச் செயலாளர் நாயகம், தேர்தல் ஆணையாளர்கள் ஐவரென மேலும் ஆறு பேரும் எதிர்மனுதாரர்களாகச் சேர்க்கப்பட்டிருந்தனர். ஆக மொத்தம் எதிர்மனுதாரர்களின் எண்ணிக்கை 97.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் உயர்பீடத்தில் மனுதாரரான நஸீர் அஹமட்டுக்கு ஆதரவாக நான்கு, ஐந்து பேர் இருந்தனர். அவர்களின் சார்பிலேயே கலாநிதி ரொமேஷ் டி சில்வா உட்பட இந்த நான்கு, ஐந்து ஜனாதிபதி சட்டத்தரணிகளும் களம் இறக்கப்பட்டனர்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சி, அதன் தலைவர் ஹக்கீம், செயலாளர் நிஸாம்காரியப்பர் என சுமந்திரன் வாதாடிய பக்கத்துக்கு எதிராக சட்டவாதம் புரிய – எதிர் மானுதாரர் தரப்பில் இருந்தே 'ஸேம் சைட்' கோல் அடிக்க – இறக்கப்பட்டவர்களே நீங்கள் குறிப்பிடும் அந்த நான்கு, ஐந்து ஜனாதிபதி சட்டத்தரணிகளும்.

அவர்களின் சட்ட வாதங்களையும் மனுதாரர் நஸீர் அஹமட்டின் சட்டத்தரணிகளின் சட்ட வாதங்களையும் முறியடித்துத்தான் இந்த வழக்கில் சுமந்திரனின் கட்சிக்காரர்கள் வெற்றி பெற்றிருக்கின்றார்கள்.

இப்படி நஸீர் அஹமட்டுக்கு ஆதரவாக ஐந்தாறு ஜனாதிபதி சட்டத்தரணிகள் ஒரே சமயத்தில் களமிறங்கி இருக்கின்றார்கள். ஜனாதிபதி சட்டத்தரணிகளின் ஓர் அமர்வுக்கான கட்டணம், ஆலோசனை அமர்வுக்கான கட்டணம், வாதத்துக்கான கட்டணம் பற்றி எல்லாம் நான் நன்கு அறிவேன். நஸீர் அகமட்டுக்கு இந்த வழக்கு இல்லை என்றாலும் 10 கோடி ரூபாவை இழக்க வைத்திருக்கும் என்பது என் கணக்கீடு. எல்லாம் அல்லாஹ்வுக்குத்தான் வெளிச்சம்...!

இந்தத் தீர்ப்பு இன்னொருவருக்கும் வயிற்றைக் கலக்கி இருக்கும் என்று நம்புகிறேன். இதேபோன்று அதே வரவு – செலவுத் திட்டத்திற்கு தனது கட்சியின் முடிவை மீறி ஆதரவு வாக்கை வழங்கிய அம்பாறை மாவட்ட எம்.பியான முஷாரப்புக்கு எதிராக ரிஷாத் பதியுதீனின் அகில இலங்கை முஸ்லிம் காங்கிரஸ் கட்சி நடவடிக்கை எடுத்திருந்தது. அதற்கு எதிராக முஷாரப் எம்.பி. உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்திருந்தார். அந்த வழக்கிலும் ரிஷாத்துக்கும் அவரது கட்சிக்குமாக சுமந்திரனே முன்னிலையாகி வாதிட்டு இருந்தார். நஸீர் அஹமட்டின் வழக்கு விசாரணை முடிவதற்கு முன்னரே அந்த வழக்கின் விசாரணை முடிந்துவிட்டது. தீர்ப்பு இன்னும் வெளிவரவில்லை. ஆனாலும் இரண்டு வழக்குகளிலும் நீதியரசர்கள் ஆயம் வெவ்வேறானவை.

நஸீர் அஹமட்டின் வழக்கின் தீர்ப்பு வெளியானதும், அதன் பிரதியை முஷாரப்பின் வழக்கின் எதிர்மனுதாரரான ரிஷாத் பதியுதீனின் சட்டத்தரணி சுமந்திரன் முஷாரப் வழக்கிற்கான ஒரு வழிகாட்டுதல் தீர்ப்பாக அந்த வழக்கின் ஆவணங்களுடன் சேர்ப்பதற்காக தாக்கல் செய்திருக்கிறார்.

நஸீர் அஹமட்டின் வழக்கில் அவரைக் கட்சியை விட்டு நீக்குவது தொடர்பில் ஓர் ஒழுங்காற்று விசாரணை கட்சியினால் நடத்தப்படவில்லை, அது இயற்கை நீதித் தவறு என்று மனுதாரர் தரப்பில் வாதிடப்பட்டது. ஆனால், அந்த வாதத்தை நிராகரித்து உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

முஷாரப்பின் வழக்கில் அத்தகைய ஒழுக்காற்று விசாரணை நடத்தப்பட்டிருக்கின்றது. ஆனால் அது சீரிய முறையில் நடத்தப்படவில்லை என்பது முஷாரப் தரப்பின் வாதம். அந்த ஒழுக்காற்று விசாரணை அவசியமேயற்றது, அது இல்லாமலேயே முஷாரப்பைக் கட்சியை விட்டு வெளியேற்றியமை சட்டபூர்வமானது என சுமந்திரன் வாதிட்டிருந்தார். தீர்ப்பு எந்த சமயத்திலும் வரலாம் என்பதுதான் நிலைமை.

முக்கியமான முஸ்லிம் கட்சி ஒன்றின் தலைவருக்கு (ரவூப் ஹக்கீம் அல்லர்) மிக நெருக்கமான ஒரு முஸ்லிம் பிரமுகருடன் பேசிக்கொண்டிருந்தேன். அவர் மூலம் பெற்று, பின்னர் நான் உறுதிப்படுத்திய தகவல் இது.

நஸீர் அஹமட்டின் பதவியைப் பறிக்க வழி செய்யும் தீர்ப்பை நேற்று முன்தினம் உயர்நீதிமன்றம் வழங்கியதும் அந்தச் செய்தி முஸ்லிம் தரப்புக்களில் பரபரப்பான பேசு பொருளாகியது.

செய்தி கேட்டு மகிழ்ந்த அந்த முஸ்லிம் தலைவர் சுமந்திரனுக்கு தொலைபேசி அழைப்பு எடுத்தார். அவரை (சுமந்திரனை) வாயார வாழ்த்திப் புகழ்ந்தார். கடைசியில் ஒரு விடயத்தைச் சொல்லி முடித்து போனை 'கட்' பண்ணினாராம்.

"உங்களின் திறமையும் தகுதியும் வலிமையும் உங்களின் கட்சியினருக்கு (தமிழரசினர் மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருக்கு) தெரியாவிட்டாலும் – புரியாவிட்டாலும் – எங்களுக்கு நன்கு தெரியும். அதனால் உங்களை மதிக்கின்றோம். பாராட்டுகின்றோம்."–என்றுமுடித்தாராம் அவர். அதற்கு சுமந்திரன் என்ன பதில் சொன்னார் என்பது தெரியவில்லை.

---

## விரைவில் தீர்வு காண...

– இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

வேறுபாடுகளை முன் நிறுத்தி மோதல்களை ஏற்படுத்திக் கொண்டதால் நாடு என்ற வகையில் இலங்கை சரிவை சந்திக்க நேரிட்டது எனச் சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, அரசியல் ரீதியான வேறுபாடுகளும் இலங்கையை நெருக்கடிக்கு உள்ளாக்கியுள்ளது எனவும் குறிப்பிட்டார்.

மட்டக்களப்பு சென் மைக்கல் கல்லூரியின் 150 ஆவது ஆண்டு பூர்த்தி விழா நிகழ்வில் நேற்று கலந்துகொண்டிருந்த போதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேற்கண்டவாறு கூறினார்.

கல்லூரிக்கு வருகை தந்த ஜனாதிபதி மாணவர்களுடன் சுமுகமாகக் கலந்துரையாடினார்.

அதனையடுத்து பாடசாலை மாணவர்களால் தேசிய கீதம் தமிழ், சிங்கள மொழிகளில் இசைக்கப்பட்டன.

அது தொடர்பில் கருத்து தெரிவித்த ஜனாதிபதி,

"தேசிய கீதத்தில் அனைவரும் ஒரு தாய் பிள்ளைகள் என்று கூறப்படுவதால் அதனை சிங்களத்தில் இசைத்தாலும் தமிழில் இசைத்தாலும் பிரச்சினைகள் இல்லை. அனைவரும் ஒன்றுபட்டு ஒரே தேசமாக முன்னோக்கிச் செல்ல வேண்டியது மிகவும் அவசியம்.

வேறுபாடுகளை முன் நிறுத்தி மோதல்களை ஏற்படுத்திக் கொண்டதால் நாடு என்ற வகையில் இலங்கை சரிவைச் சந்திக்க நேரிட்டது. அரசியல் ரீதியான வேறுபாடுகளும் இலங்கையை நெருக்கடிக்கு உள்ளாக்கியுள்ளது.

நாட்டின் பொருளாதாரம் முழுமையாகச் சரிவடைந்ததால் கடந்த வருடத்தில் நாட்டு மக்கள் பெரும் நெருக்கடிகளை எதிர்நோக்குகின்ற. அனைத்து வேறுபாடுகளையும் விடுத்து நாட்டுக்காக அனைவரும் ஒன்றுபட்டு பயணிக்க வேண்டும்.

உள்நாட்டுப் பிரச்சினைகளை நாட்டுக்குள்ளேயே தீர்த்துக்கொள்ள வேண்டும். அதற்காக சர்வதேசத்தை நாட வேண்டிய அவசியம் இல்லை." – என்றார்.

கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான், இராஜாங்க அமைச்சர்களான எஸ்.வியாழேந்திரன், சிவநேசதுரை சந்திரகாந்தன் ஆகியோருடன் மட்டக்களப்பு சென்.மைக்கல் கல்லூரியின் அதிபர் எண்டன் பெனடிக் உட்பட பாடசாலையின் ஆசிரியர் குழாம், மாணவர்கள் உள்ளிட்ட பலரும் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர்.

---

## தேர்தல் முறையில்...

பத்திரம் அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

அரசின் சார்பில் நீதி மற்றும் அரசமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் கலாநிதி விஜயதாஸ ராஜபக்ஷவால் அதற்கான அமைச்சரவைப் பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

உத்தேச அரசமைப்பு திருத்தத்தின்படி, 225 நாடாளுமன்ற உறுப்பினர்களில் 160 பேர் தொகுதி அளவில் மக்களால் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். எஞ்சிய 65 நாடாளுமன்ற உறுப்பினர்கள் தேசிய அல்லது மாகாண மட்டத்தில் விகிதாசார அடிப்படையில் தெரிவு செய்வதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதன்படி, அரசமைப்பு திருத்தத்தை மேற்கொள்வதற்கு அரசு எதிர்பார்த்துள்ள நிலையில், அமைச்சரவையின் அனுமதியை வழங்குமாறு நீதி அமைச்சர் பணிப்புரை விடுத்துள்ளார்.

தற்போதைய அரசமைப்பின்படி, 225 நாடாளுமன்ற உறுப்பினர்களில் 196 பேர் விகிதாசார அடிப்படையில் மாவட்ட மட்டத்தில் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். எஞ்சியுள்ள 29 நாடாளுமன்ற உறுப்பினர்களும் கட்சிகள் பெற்ற வாக்குகளின் வீதத்துக்கு ஏற்ப அந்தந்த கட்சிகளில் இருந்து தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

## தமிழினத்தின் துரதிர்ஷ்டம்

தமிழ்த் தேசியக் கட்சிகளின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் நாடாளுமன்றத்தின் உள்ளும் புறமும் தொடர்ந்து போராடத் தயாராக வேண்டும் என வடக்கு மாகாணசபை முன்னாள் உறுப்பினரும் ரெலோப் பிரமுகருமான சபா குகதாஸ் வலியுறுத்தியிருக்கின்றார்.

நாடாளுமன்றத்திலும் ஒற்றுமை இன்மையைக் காட்டிக் கொடுக்காமல், சுயலாப நோக்கில் செயற்படாமல், ஒற்றுமையே பலம் என்ற நோக்கில் களத்தில் இறங்குங்கள், செயலில் காட்டுங்கள் என அவர் வற்புறுத்தியிருக்கின்றார்.

பாதிப்பின் விரக்தி நிலையில் வாழும் வடக்கு - கிழக்கு மாகாண பெரும்பான்மைத் தமிழ் மக்களின் மன நிலையை விளங்கிக் கொண்டு, தொடர்ந்து போராட்டங்களை அறிவித்து, அரசியல் இருப்புக்கான குளிர்காய்தலை தவிர்க்க வேண்டும் என அவர் கூறியிருக்கின்ற விடயம் இச்சமயத்தில் மிக, மிக முக்கியமானது.

தமிழ் மக்களைப் பொறுத்தவரை காலத்தின் கோலத்தை விளக்கும் கூற்று இது.

வாழ்வியல் இருப்புக்கும், இருப்பவற்றைத் தக்க வைப்பதற்கும், உரியவற்றைப் பெற்றுக் கொள்வதற்கும் தமிழர்கள் போராடித்தானாக வேண்டும். அது தவிர்க்க முடியாத கட்டாயம்தான்.

ஆனால், போராடிப் போராடிக் களைத்து, சபா குகதாஸ் சுட்டிக் காட்டுகின்றமை போல பாதிப்பின் விரக்தி நிலையில் துவண்டு போய்க் கிடக்கின்றது தமிழினம்.

இதனைத் தமிழ்த் தலைவர்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

இந்த விரக்தி நிலையிலும், எழுச்சியையும், உணர்வையும் தூண்டும் போராட்டச் சிந்தனையைத் தமிழ் மக்களிடையே ஏற்படுத்த வேண்டுமானால் - மக்களைத் தொய்ய விடாமல் உற்சாகத்தோடு போராட வைக்க வேண்டுமானால் - அதற்கான வழியில் தலைவர்கள் முன்மாதிரியாகச் செயல்பட வேண்டும்.

சபா குகதாஸ் சுட்டுவது போல வெறுமனே தாங்கள் அரசியல் குளிர் காய்வதற்காகத் தங்களின் வேட்டி கசங்காத போராட்டங்களை வெளிப்பூச்சுக்கு நடத்தி, மக்களின் விரக்தி நிலையைத் தீவிரமாக்கத் தலைவர்கள் முயலக்கூடாது. மக்களை ஏமாளிகளாக நினைத்து போராட்ட சூளுரைகள், அறிவிப்புகளை கண்மூடித்தனமாக அவர்கள் விடுக்கவும் கூடாது.

மக்களின் போராட்டத்தை கொதிநிலையில் வைத்திருப்பதற்கு, அவர்கள் துவண்டு விடாமல் உரிமைக்கான உணர்வெழுச்சியில் உறுதியாக நிற்பதற்கு, அகிம்சை மார்க்கத்திலேயே - அற நெறியிலேயே - காந்தியப் பாதையிலேயே - பல முறைகள் உண்டு.

தலைவர்கள் நீதிமன்றத் தடைகளையும் மீறி தங்களையும் சட்ட ஆபத்துக்குள் மாட்டியவாறு முன்னெடுத்த P2P பேரணி இதற்கு நல்ல உதாரணம். தலைவர்களோடு மக்களும் அதில் எழுச்சியோடு பங்கு கொண்டனர்.

அப்படிச் செயலாற்றுவதற்குத் தலைவர்களிடம் தேவைப்படுவது சுயநல அரசியல் அன்று. சுயத்தியாகம். வலிமையான அரசியல் போராட்ட முன்மாதிரி. வெற்றுவேட்டுப் பேச்சுக்களினாலும் வெற்றுக் கோஷ அறிக்கைகளினாலும் அதை எட்ட முடியாது.

ஆனால், அவை மட்டும்தான் நம் தலைவர்களிடம் எஞ்சிக் கிடக்கின்றன. அதுதான் தமிழினத்தின் துரதிஷ்டம்.



## மொட்டுவுடன் கூட்டணி சு.க. அமைக்க மாட்டாது

### மைத்திரி திட்டவட்டம்

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுடன் இணையும் எந்தத் தயார் நிலையிலும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி இல்லை என அதன் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேன மீண்டும் தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் மத்திய செயற்குழுக்கூட்டத்தின் பின்னர் ஊடகங்களிடம் கருத்து வெளியிடும் போதே அவர் இதனை கூறியுள்ளார்.

தேர்தலை இலக்கு வைத்து தேர்தல் விஞ்ஞாபனத்தை வெளியிடுவது மற்றும் மாவட்ட மட்டத்தில் ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளை விரிவுப்படுத்துவது ஆகியன தொடர்பாகக் கலந்துரையாடி வருகின்றோம்.

அடுத்து நடத்துவது எந்தத்தேர்தலாக இருந்தாலும் சுதந்திரக்கட்சி, பொதுஜன பெரமுனவுடனான கூட்டணியில் எந்த வகையிலும் இணையாது.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி தலைமையில் கூட்டணியை உருவாக்குவது தொடர்பான பேச்சுவார்த்தைகளை நடத்தி வருகிறோம் என மைத்திரிபால சிறிசேன கூறியுள்ளார்.

## யாழில் மின்சாரக் கம்பி அறுந்து வீழ்ந்து பெண் ஒருவர் படுகாயம்



யாழ். வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சங்கரத்தை பத்திரகாளி அம்மன் ஆலயத்துக்கு அண்மையில் மின்சாரக் கம்பி அறுந்து வீழ்ந்து, மின்சாரம் தாக்கியதில் பெண்ணொருவர் படுகாயமடைந்துள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று இடம்பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,


அந்தப் பகுதியில் வீதி அகலிப்புப் பணிகள் இடம்பெற்று வருகின்றன. இந்நிலையில், வீதியோரத்தில் நின்ற பனைமரம் ஒன்று வெட்டப்பட்டது. இவ்வாறு வெட்டப்பட்ட பனைமரமானது மின்சாரக் கம்பி மீது வீழ்ந்தது.

பனை விழுந்ததால் மின்சாரக் கம்பி அறுந்து வீதியில் நின்ற பெண்ணொருவரின் மோட்டார் சைக்கிள் மீது முட்டியது. அவ்வேளை மோட்டார் சைக்கிளில் இருந்த பெண் தூக்கி வீசப்பட்டார்.

அந்தப் பெண் அவசர அம்புலன்ஸ் மூலம் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டார். அங்கு அவர் சிகிச்சை பெற்று வருகின்றார்.

இந்தச் சம்பவத்தில் 5 மின் கம்பங்கள் முறிந்து சேதமாகின. இதனால் அப்பகுதிக்கு மின்சாரம் தடைப்பட்டது. மின்சார இணைப்பைச் சீர் செய்யும் நடவடிக்கையில் இலங்கை மின்சார சபையினர் ஈடுபட்டனர்.

# கானகம் ஒளிப்படக் கண்காட்சி தெல்லிப்பளை வீமன்காமத்தில்!

























ஒளிப்படக் கலைஞர் துவாரகன் கிரிதரனின் கானகம், வனவிலங்கு மற்றும் இயற்கை பற்றிய ஒளிப்படக் கண்காட்சி அனலி, நெசவுசாலை வீதி, வீமன்காமம், தெல்லிப்பளையில் ஒக்டோபர் 6ஆம் திகதி (நேற்று முன்தினம்) மாலை முதல் ஆரம்பமாகி, இடம்பெற்று வருகிறது .

இயற்கையான பனை மரங்கள் நிறைந்த சூழலில் கானுயிர் ஒளிப்படக் கண்காட்சி ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. இக்கண்காட்சி முற்றிலும் வேறுபட்ட அனுபவத்துடன் காணப்படுகிறது. அதனைப் பாடசாலை மாணவர்கள் மற்றும், பொதுமக்கள் ஆர்வமுடன் பார்வையிட்டுவருகின்றனர்.


கண்காட்சியில் இலங்கையின் அரியவகை உயிரினங்கள், பறவைகள், இலங்கை சிறுத்தைகள் எனப் பல அரிய புகைப்படங்கள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

தொடர்ச்சியாக ஒக்டோபர் 11 ஆம் திகதி வரை காலை 10.00 மணி தொடக்கம் மாலை 7.00 மணிவரை இக்கண்காட்சியைப் பார்க்கலாம்.

(08ஆம் பக்கம் பார்க்க)

# கானகம் ஒளிப்படக் கண்காட்சி

(07ஆம் பக்கத் தொடர்ச்சி)





# விரட்டிப் பார்த்தது இலங்கை மடக்கி வென்றது தெ.ஆபிரிக்கா

தென்னாபிரிக்காவுக்கு எதிரான தனது முதலாவது ஆட்டத்தில் இலங்கை அணி தோல்வியடைந்துள்ளது.

தென்னாபிரிக்க அணி வீரர்கள் மூவர் சதங்களை அடிக்க, அந்த அணி 428 ஓட்டங்களைச் சேர்த்ததன் மூலம் உலகக் கிண்ண வரலாற்றில் அதிகூடிய ஓட்டங்களைச் சேர்த்த அணி என்ற சாதனையையும் படைத்தது.

13ஆவது உலகக் கிண்ணத் தொடர் இந்தியாவில் நடைபெற்று வரும் நிலையில், நேற்று டில்லியில் நடைபெற்ற பகல் – இரவு ஆட்டத்தில் இலங்கை – தென்னாபிரிக்க அணிகள் களம் கண்டன.

இதில், முதலில் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி, டி கொக் (100), ராசி வன் டெர் டியுசன் (108), அடன் மார்க்ரம் (106) ஆகியோரின் அதிரடிச் சதங்கள் கைகொடுக்க, 50 ஓவர்கள் நிறைவில் 5 விக்கெட்டுகள் இழப்புக்கு 428 ஓட்டங்களைக் குவித்தது.

இந்த ஓட்ட எண்ணிக்கை உலகக் கிண்ண வரலாற்றில் அதிகூடிய ஓட்ட எண்ணிக்கையாகப் பதிவாகியுள்ளது.

இலங்கைஅணிசார்பாகபந்துவீச்சில், டில்ஷான் மதுசங்க 2 விக்கெட்டுகளைக் கைப்பற்ற, கசுன் ராஜித, மதீஷ பத்திரன, டுனித் வெல்லலகே ஆகியோர் தலா ஒரு விக்கெட்டைக் கைப்பற்றினர்.

பின்னர் 429 ஓட்டங்கள் என்ற வெற்றியிலக்கு நோக்கிக் களமிறங்கிய இலங்கை அணி, குசல் மெண்டிஸ் (76), சரித் அசலங்க (79), தசுன் ஷானக (68) ஆகியோரின் அரைச்சதங்களின் உதவியுடன் கௌரவமான ஓட்ட எண்ணிக்கை நோக்கிச் சென்றது.

எனினும், இறுதியில் 44.5 ஓவர்களில் இலங்கை அணி, 326 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுகளையும் பறிகொடுத்தது.

இதனால், தென்னாபிரிக்க அணி 102 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.


அந்த அணி சார்பாக பந்துவீச்சில், ஜெரால்ட் கோட்ஸி 3 விக்கெட்டுகளைக் கைப்பற்ற, ஜன்சென், ரபெடா, மஹராஜ் ஆகியோர் தலா இரண்டு விக்கெட்டுகளை வீழ்த்தினர். நிகிடி எஞ்சிய ஒரு விக்கெட்டைச் சாய்த்தார்.

இந்த ஆட்டத்தின் நாயகனான தென்னாபிரிக்காவின் அடன் மார்க்ரம் தெரிவானார்.

இந்தப் போட்டியில் வெற்றிபெற்ற தன் மூலம் தென்னாரிக்க அணிக்கு இரண்டு புள்ளிகள் கிடைத்தன.

இன்று சென்னையில் நடைபெறவுள்ள ஆட்டத்தில் இந்தியா – அவுஸ்திரேலியா களம் காணவுள்ளது.

# இலங்கையில் புதிதாக வடிவமைக்கப்பட்ட யானை வேலி முல்லைத்தீவில் அறிமுகம்






இலங்கையில் முதல் முதலாக "ஐ" வடிவிலான யானை பாதுகாப்புப் வேலி முல்லைத்தீவுப் புதுக்குடியிருப்பு மன்னாகண்டல் பகுதியில் பாடசாலை ஒன்றிற்கு அமைத்து கொடுக்கப்பட்டுள்ளது.

வவுனியா பல்கலைக்கழகத்தின் உயிர்த்துறை திணைக்களத்தின் தலைவரும் விரிவுரையாளருமான கலாநிதி விஜயமோகனின் எண்ணத்தில் வடிவமைக்கப்பட்ட யானை பாதுகாப்பு வேலி (தொங்குவேலி) இலங்கையில் முதல் முறையாக முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு மன்னாகண்டல் அ.த.க.பாடசாலைய்சி யானையில் இருந்து பாதுகாப்பதற்காக அமைத்து கொடுக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வு நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை நடைபெற்றது. வவுனியா பல்கலைக்கழகத்தின் ஏற்பாட்டில் ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதி உதவியில் 10 லட்சம் ரூபா செலவில் இந்த யானை பாதுகாப்பு வேலி அமைக்கப்பட்டுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக வவுனியா பல்கலைக்கழத்தின் போராசிரியர் காமினி சேனநாயக்கா மற்றும் முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் அ.உமாமகேஸ்வரன், வவுனியாப் பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் மங்களேஸ்வரன், புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் எஸ்.ஜெயகாந்தன் உள்ளிட்டவர்கள் கலந்து கொண்டு, பாடசாலை வளாகத்தைச் சூழ அமைக்கப்பட்ட யானை வேலியை வைபவ ரீதியாக திறந்து வைத்தனர்.

இரண்டு கிலோமீற்றர் நீளத்துக்கு இந்த யானை வேலி அமைக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வில் கிராம அலுவலகர், பாடசாலை சமூகத்தினர் மற்றும் பொது மக்கள் எனப் பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

நிகழ்வில் யானை – மனித மோதல், அதில் இருந்து மனிதர்கள் எவ்வாறு பாதுகாப்பாக இருப்பது, யானைகளை எவ்வாறு பாதுகாப்பது போன்ற விடயங்கள், கடந்த காலங்களில் பயன்படுத்தப்பட்டு வந்த யானை வேலிகளை யானைகள் எவ்வாறு உடைத்து சேதப்படுத்தி உள்நுளைந்தன, புதிதாக வடிவமைக்கப்பட்ட தொங்கு வேலி பரீட்சித்துப் பார்த்தபோது அவற்றைத் தாண்டி யானைகள் உள்நுழையாமல் இருக்கின்றமை போன்ற விளக்கங்கள் காட்சிகள், ஆதாரங்கள் மூலம் கலாநிதி விஜயமோகனால் விளக்கமளிக்கப்பட்டது.

# மலேசிய வெளிவிவகார அமைச்சர் இன்று இலங்கைக்கு வருகின்றார்



மலேசிய வெளவிவகார அமைச்சர் சம்ப்ரி அப்துல் காதிர் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு இன்று ஞாயிற்றுக்கிழமை இலங்கைக்கு வருகை தரவுள்ளார்.

இந்த விஜயத்தின் போது அவர் ஜனாதிபதி, பிரதமர் மற்றும் வெளிவிவகார அமைச்சர் ஆகியோரை சந்திக்கவுள்ளார்.

எதிர்வரும் 09 ஆம் திகதி கொழும்பில் நடைபெறவுள்ள இந்து சமுத்திர வலய நாடுகளின் பிரதிநிதிகள் மாநாட்டில் சம்ப்ரி அப்துல் காதிர் கலந்துகொள்ளவுள்ளார்.

மலேசிய வெளிவிவகார அமைச்சருடன் அந்நாட்டின் உயர்மட்ட இராஜதந்திரிகள் குழுவும் நாட்டிற்கு வருகை தரவுள்ளது.

இன்று வருகை தரவுள்ள மலேசிய வெளிவிவகார அமைச்சர் தலைமையிலான இராஜதந்திரிகள் குழாம் எதிர்வரும் 12 ஆம் திகதி வரை நாட்டில் தங்கியிருப்பார்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# புத்தளம் ஓட்டோ விபத்தில் பெண் மரணம்; மூவர் காயம்



புத்தளம் மனத்தீவு பகுதியில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இரவு இடம்பெற்ற விபத்தில் பெண்ணொருவர் அந்த இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

புத்தளத்திலிருந்து 6 ஆம் கட்டை நோக்கிப் பயணித்த ஓட்டோ முன்னாள் மாடு ஒன்று குறுக்கால் பாய்ந்தமையினால் முச்சக்கர வண்டியைக் கட்டுப்படுத்த முற்பட்ட போது அது வீதியை விட்டு விலகி மதிலில் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

இதன்போது ஓட்டோவில் பயணித்த பெண் அந்த இடத்திலேயே உயிரிழந்தார். ஓட்டோ சாரதி மற்றும் இரண்டு சிறுவர்கள் காயங்களுக்கு உள்ளாகியுள்ளனர். மூவரும் புத்தளம் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

விபத்தில் சிக்கி உயிரிழந்தப் பெண் 40 வயதுடைய புத்தளம் பகுதியைச் சேர்ந்தவரென பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்த பெண்ணின் சடலம் புத்தளம் ஆதார வைத்தியசாலையில் பிரேத அறையில் வைக்கப்பட்டிருந்தது.

விபத்து சம்பவம் தொடர்பில் விசாரணைகளை புத்தளம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# நாட்டின் அந்நியச் செலாவணி அதிகரிப்பு



வெளிநாட்டில் உள்ள இலங்கையர்கள் சட்ட ரீதியாக இலங்கைக்கு அனுப்பும் பணத்தில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது என வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் தெரிவித்துள்ளது.

இந்த வருடத்தின் முதல் 8 மாதங்களில் 3,863 மில்லியன் அமெரிக்க டொலர் அந்நியச் செலாவணியை அவர்கள் இலங்கைக்கு அனுப்பியுள்ளனர் என பணியகம் தெரிவித்துள்ளது.

கடந்த வருடத்தின் முதல் 8 மாதங்களில் வெளிநாடுகளில் உள்ள இலங்கையர்கள் 2,215 மில்லியன் அமெரிக்க டொலர்களை நாட்டிற்கு அனுப்பியுள்ளனர். கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் இந்த வருடம் இந்த தொகை 74.4 வீதமாக அதிகரித்துள்ளது என வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் தெரிவித்துள்ளது.

இந்த வருடம் ஓகஸ்ட் மாதத்தில் மாத்திரம், தொழிலாளர்கள் நாட்டிற்கு அனுப்பிய பணம் 499 மில்லியன் அமெரிக்க டொலர்களாகும்.

கடந்த வருடம் ஆகஸ்ட் மாதம் 325 மில்லியன் அமெரிக்க டொலர்கள் இலங்கைக்கு அனுப்பப்பட்டது என வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் தெரிவித்துள்ளது.

# அதிவேக வீதிகளில் பயணிக்கின்ற வாகன சாரதிகளுக்கு அறிவுறுத்தல்



அதிவேக வீதிகளில் பயணிக்கும் வாகன சாரதிகள் அதிக மழையுடனான வானிலை காரணமாக மிகுந்த அவதானத்துடன் செயற்பட வேண்டும் என வீதிப் போக்குவரத்து அதிகார சபை அறிவுறுத்தியுள்ளது.

அதிவேக வீதிகளில் மணித்தியாலத்திற்கு 60 கிலோமீட்டர் வேகத்தில் பயணிக்குமாறு சாரதிகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இதனிடையே, அதிக மழையுடனான வானிலை காரணமாக பல்வேறு வீதிகள் நீரில் மூழ்கியுள்ளமையினால், அந்த வீதிகளைப் பயன்படுத்தும் போது ஏற்படக்கூடிய தடைகள் தொடர்பில் அவதானத்துடன் செயற்படுமாறும் பொதுமக்கள் மற்றும் சாரதிகளுக்கு பொலிஸார் அறிவுறுத்தியுள்ளனர்.

# டிஜிட்டல் பொருளாதார மாற்றத்தை துரிதப்படுத்த அமைச்சு நடவடிக்கை




டிஜிட்டல் பொருளாதார மாற்றத்தைத் துரிதப்படுத்தும் வேலைத்திட்டத்தை ஒக்டோபர் 11ஆம் திகதி முதல் ஆரம்பிப்பதற்கு தொழில்நுட்ப அமைச்சு தீர்மானித்துள்ளது.

அதற்கு இணையாக, அரச மற்றும் தனியார் துறையினர் ஒன்றுபட்டு டிஜிட்டல் பொருளாதார திட்டத்தை செயற்படுத்தும் முறைமை ஆரம்பிக்கப்படவுள்ளது.

தற்போது தயாரிக்கப்பட்டிருக்கும் டிஜிட்டல் பொருளாதார முறைமையின் ஊடாக இலங்கையின் பொருளாதாரத்திற்கு மிகப்பெரிய பங்களிப்பு கிடைக்கும் என தொழில்நுட்ப இராஜாங்க அமைச்சர் கனக ஹேரத் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

டிஜிட்டல் பொருளாதார கொள்கையினால் சர்வதேச போட்டித்தன்மை மிக்க பொருளாதாரத்துடன் போட்டியிடும் வகையில் இலங்கையை தயார்ப்படுத்த முடியும். அதனூடாக அடுத்த தசாப்தத்தில் இலங்கையின் வலுவான பொருளாதாரத்தை கட்டமைப்பதற்கான இயலுமை கிட்டும் என்றும் கனக ஹேரத் தெரிவித்துள்ளார்.

அதற்காக டிஜிட்டல் பொருளாதார திட்டத்தை சமூகமயப்படுத்தவும் அது தொடர்பாக பொதுமக்களை தெளிவூட்டும் செயலமர்வுகளை நடத்தவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது என இராஜாங்க அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

# விபுலானந்தாவில் ஆசிரியர் தின விழா!




(காரைதீவு சகா)

காரைதீவு விபுலானந்தா முன்பள்ளியின் ஆசிரியர் தின விழா நேற்று (6) வெள்ளிக்கிழமை பணிப்பாளர் வி.ரி. சகாதேவராஜா தலைமையில் சிறப்பாக நடைபெற்றது .

பிரதம விருந்தினராக ஓய்வு நிலை அதிபர் கே புண்ணியநேசன் கலந்து கொண்டார்.

சிறப்பு விருந்தினர்களாக ஆசிரியர்களான ஜெய நிலாந்தினி, ரம்யா, சனுஜா ஆகியோர் கலந்து கொண்டார்கள்.

பெற்றோர்கள் ஏற்பாடு செய்த இந்த நிகழ்வில் குழந்தைகளின் கலைநிகழ்வுகளும் இடம்பெற்றன.

# கல்லடியில் ஆசிரியர் தின விழா!



(பழுவூரான்)

மட்டக்களப்பு கல்வி வலயத்திலுள்ள கல்லடி புதுமுகத்துவாரம் புனித இக்னேசியஸ் வித்தியாலய சர்வதேச ஆசிரியர்தின விழா நேற்று வெள்ளிக்கிழமை (06) வித்தியாலய கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

வித்தியாலய அதிபர் பி.தங்கவேல் தலைமையில் நடைபெற்ற இந்த ஆசிரியர் தின விழாவில், ஆரம்ப நிகழ்வாக பாடசாலை மாணவர்களால் ஆசிரியர்கள் மலர்ச் செண்டு கொடுத்து வரவேற்கப்பட்டனர்.

இதன்போது ஆசிரியர்களால் ஆடல், பாடல், கவிதை மற்றும் கதை கூறுதல் ஆகிய நிகழ்வுகள் நிகழ்த்தப்பட்டன.

# பாடசாலை மாணவருக்கு சப்பாத்துகள் வழங்கல்



(த.சுபேசன்)

இந்திய றோட்டறிக் கழகங்களின் நிதிப் பங்களிப்பில், யாழ். மாவட்டத்தில் உள்ள மூன்று பாடசாலைகளில் கல்வி கற்கும் தேவைப்பாடுடைய 21 மாணவர்களுக்கு அண்மையில் காலணிகள் வழங்கப்பட்டுள்ளன.

சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி, வேலணை மத்திய கல்லூரி மற்றும் சுழிபுரம் விக்டோரியா கல்லூரி ஆகிய பாடசாலைகளைச் சேர்ந்த தேவைப்பாடுடைய மாணவர்களுக்கே வழங்கப்பட்டுள்ளன.

சுன்னாகம் பாரம்பரிய றோட்டறிக் கழகத்தினர் பாடசாலைகளின் இடைவினைக் கழகம் ஊடாக இவற்றை வழங்கியுள்ளனர்.

# மண்டூஸ் புயலால் பாதிக்கப்பட்ட கடற்றொழிலாளருக்கு வலைகள்





கிளிநொச்சி மாவட்டத்தில் மண்டூஸ் புயலால் பாதிக்கப்பட்ட 40 கடற்றொழிலாளர்களுக்கு தலா 45 ஆயிரம் பெறுமதியான மீன்பிடி வலைகள் மற்றும் அதற்கான பொருள்கள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

மன்னர் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தால் (மெசிடோ) மேற்படி பொருள்கள் நேற்று (06) கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் வைத்து வழங்கப்பட்டுள்ளன.

நாட்டில் ஏற்பட்ட மண்டூஸ் புயல் காரணமாக வடமாகாணத்தில் பாதிக்கப்பட்ட 172 மீனவர்களுக்கு இந்த நிறுவனத்தால் தலா 45 ஆயிரம் ரூபா பெறுமதியான வலைகள் வழங்கப்பட்டுள்ளன .

வலைகள் வழங்கும் நிகழ்வில் மாவட்ட அரச அதிபர் ரூபவதி கேதீஸ்வரன், மாவட்ட செயலக பதவி நிலை உத்தியோகத்தர்கள், மன்னர் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தின் பிரதிநிதிகள், மீனவர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

## கவிதை நூல் வெளியீடு நாளை

(அ.அஸ்வர்)

கவிஞர் முழுமதி எம். முர்தளா எழுதிய “மழையாகிறேன் வெயிலாகிறேன்” கவிதை நூல் வெளியீட்டு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை (08) மாலை இடம்பெறவுள்ளது.

இவ் வெளியீட்டு விழா அக்கரைப்பற்று பிரதச செயலக மண்டபத்தில், அம்பாறை மாவட்ட ஊடகவியலாளர் சம்மேளனத்தின் தலைவர் கலாபூசணம் மீரா எஸ். இஸ்ஸடீன் தலைமியில் இடம்பெறவுள்ளது.

இவ் விழாவில் கிழக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் ஏ.எல். தவம், ஐக்கிய சமாதான முன்னணியின் பிரதித் தலைவர் எம்.பி.அக்பர் அலி, அக்கரைப்பற்று முன்னாள் மாநகரசபை உறுப்பினர் எஸ்.எம். சபீஸ், கவிஞர் வில்சன் சுதாகர், அம்பாறை மாவட்ட கலாசார உத்தியோகத்தர் ஏ.எல்.தௌபீக் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இங்குநூலின்விமர்சனஉரையை எழுத்தாளர்களான எஸ்.எம்.மிஹாத், எம்.அப்துல் றஸாக், கவிஞர்களான அலறி றிபாஸ், றியாஸ் குரானா ஆகியோர் நிகழ்த்துவர்.

## மாணவிக்கு கல்வி அமைச்சில் பாராட்டு!



(பொகவந்தலாவ நிருபர்)

நாவலப்பிட்டி தொடக்கம் பொகவந்தலாவ வரையிலான 54 கிலோ மீற்றர் தூரத்தை எட்டு மணித்தியாலங்களும் 30நிமிடங்களில் நடந்து சோழன் உலக சாதனை புத்தகத்தில் இடம்பிடித்த பொகவந்தலாவ சென் மேரீஸ் தேசிய கல்லூரியில் தரம் 10 இல் கல்வி பயிலும் வசந்தகுமார் நிதர்ஷனாவை கல்வி அமைச்சிக்கு அழைத்து கல்வி இராஜாங்க அமைச்சர் அருணசலம் அரவிந்தகுமார் பாராட்டியுள்ளார்.

மாணவிக்கு பாராட்டுக்களை தெரிவித்த கல்வி இராஜாங்க அமைச்சர் பரிசில்களையும் வழங்கினார்.

இந் நிகழ்வில் சோழன் உலக சாதனை புத்தக நிறுவனத்தின் இலங்கைக்கான உப தலைவர் ஶ்ரீநாகவாணி ராஜா சோழன், உலக சாதனை புத்தக நிறுவனத்தின் நுவரெலியா மாவட்டத்திற்கான தலைவர் எஸ்.சதீஸ்குமார் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

## சாய்ந்தமருதில் ஆசிரியர் தின நிகழ்வு!

(நூருல் ஹுதா உமர் )

கல்முனை ஜீ.எம்.எம். பாடசாலையின் ஆசிரியர் தின நிகழ்வுகள் மிகவும் கோலாகலமாக பாடசாலையின் அதிபர் எம்.ஐ.எம். இல்லியாஸ் தலைமையில் இடம்பெற்றன.

இதன்போது பாடசாலையின் அதிபர் எம்.ஐ.எம். இல்லியாஸ், பிரதி அதிபர் திருமதி குறைஷியா ராபிக், உதவி அதிபர் எம்.ஏ.சி.எல்.நஜீம் மற்றும் பகுதித் தலைவர்கள் உள்ளிட்ட ஆசிரியர்கள் மாணவர்களால் அழைத்துவரப்பட்டு மாலை அணிவித்துக் கௌரவிக்கப்பட்டனர்.

பாடசாலை அபிவிருத்தி நிறைவேற்றுக் குழுவாலும் மாணவர்களாலும் மகத்தான கௌரவம் அளிக்கப்பட்டதோடு ஆசிரியர் தின நினைவு பரிசில்களும் வழங்கப்பட்டன.



# பெய்துவரும் கடும் மழையின் காரணமாக 12 மாவட்டங்களில் 53,399 பேர் பாதிப்பு

நாட்டில் பெய்துவரும் கடும் மழையினால் 12 மாவட்டங்களில், 13 ஆயிரத்து 27 குடும்பங்களை சேர்ந்த 53 ஆயிரத்து 399 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதுவரை 06 பேர் உயிரிழந்துள்ளனர். 20 பேர் காயமடைந்துள்ளனர்.

மேல் மாகாணத்திலேயே அதிகளவானோர் பாதிக்கப்பட்டுள்ளனர் என இடர் முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

இதற்கமைய, மேல் மாகாணத்தில் 10 ஆயிரத்து 373 குடும்பங்களை சேர்ந்த 42 ஆயிரத்து 682 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

தென் மாகாணத்தில் 2 ஆயிரத்து 119 குடும்பங்களை சேர்ந்த 8 ஆயிரத்து 615 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

வட மேல் மாகாணத்தில் 146 குடும்பங்களை சேர்ந்த 1000 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என இடர் முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

இந்த நிலையில், 381 கும்பங்களை சேர்ந்த 1556 பேர் பாதுகாப்பான 16 இடங்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை, பலத்த மழையினால் காலி, மாத்தறை, களுத்துறை, இரத்தினபுரி மாவட்டங்களின் பல பகுதிகளுக்கு சிவப்பு நிற மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது என தேசிய கட்டட ஆய்வு நிறுவகம் தெரிவித்துள்ளது.

இதற்கமைய, காலி மாவட்டத்தின் எல்பிட்டிய மற்றும் நாகொட பிரதேச செயலகப் பிரிவுகளுக்கு மண் சரிவு அபாய சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

மாத்தறை மாவட்டத்தில் பிட்டபெத்தர பிரதேச செயலகப் பிரிவிற்கும், இரத்தினபுரி மாவட்டத்தில் குருவிட்ட பிரதேச செயலகப் பிரிவிற்கும், களுத்துறை மாவட்டத்தில் இங்கிரிய, வலல்லாவிட்ட மற்றும் மத்துகம ஆகிய பிரதேச செயலகப் பிரிவுகளுக்கும் மண்சரிவு அபாய சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கடந்த 18 மணித்தியாலங்களில் மாத்தறை மாவட்டம் – பிட்டபெத்தர பகுதியில் 116 மில்லிமீட்டர் மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளது.

இந்த நிலையில், மாத்தறை மாவட்டத்தில் வெள்ளத்தினால் சுமார் 6 ஆயிரம் குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன 10 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் இடம்பெயர்ந்துள்ளனர் என மாவட்ட செயலாளர் விக்ரமசிறி தெரிவித்துள்ளார்.

மண்சரிவு ஏற்பட்ட அக்குரஸ்ஸ – தியலபே மலையை அண்மித்த பகுதியில் வாழும் 36 குடும்பங்களில் 06 குடும்பங்கள் வெகுவாக பாதிக்கப்பட்டுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது. இந்த பகுதியில் கடந்த 05 ஆம் திகதி மண்சரிவு ஏற்பட்டது.

மண்சரிவு ஏற்படுவதற்கு முதல் நாள், இந்த பகுதியிலிருந்து 31 குடும்பங்களை சேர்ந்த 120 பேர் அங்கிருந்து வெளியேற்றப்பட்டனர்.

இவர்கள் தற்போது பாடசாலையொன்றிலும் விகாரையொன்றிலும் தற்காலிகமாக தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை, காலி மாவட்டத்தின் நெலுவ, மாத்தறை மாவட்டத்தின் அக்குரஸ்ஸ, இரத்தினபுரி மாவட்டத்தின் எஹலியகொட, எலப்பாத்த, கலவான மற்றும் இரத்தினபுரி ஆகிய பிரதேச செயலகப் பிரிவுகளுக்கு இரண்டாம் கட்ட மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், சில மாவட்டங்களுக்கு விடுக்கப்பட்ட முதலாம் கட்ட மண்சரிவு அபாய எச்சரிக்கை தொடர்ந்தும் நீடிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு, காலி, ஹம்பாந்தோட்டை, களுத்துறை, கேகாலை, மாத்தறை இரத்தினபுரி, கண்டி, கம்பஹா ஆகிய மாவட்டங்களிலுள்ள சில பிரதேச செயலாளர் பிரிவுகளுக்கே இவ்வாறு முதலாம் கட்ட மண்சரிவு அபாய எச்சரிக்கை நீடிக்கப்பட்டுள்ளது.

எனவே, இந்த பகுதிகளில் வாழும் மக்கள், மண்மேடு சரிதல், மரங்கள் முறிந்து விழுதல், நிலம் தாழிறங்குதல் உள்ளிட்ட அனர்த்தங்கள் தொடர்பில் அவதானமாக செயற்படுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

# இன்றைய ராசி பலன்கள் - 08.10.2023




இன்று கடினமான நாளாக இருக்கும். உங்கள் பொறுமை இழப்பீர்கள். பணிகளை திட்டமிட்டு செயலாற்ற வேண்டும்.

பணியிடச் சூழல் கடினமாக இருக்கும். உங்கள் சக பணியாளர்களிடமிருந்து ஒத்துழைப்பு கிடைக்காது. உங்களின் சௌகரியங்களை இழக்க நேரும்.

குடும்பப் பிரச்சினை காரணமாக உங்கள் துணையுடன் கருத்து வேறுபாடு காணப்படும்.

உங்கள் வீட்டின் புனரமைப்பிற்கான வகையில் கட்டாய பணச் செலவு செய்ய நேரும். உங்கள் செலவுகளை திட்டமிட வேண்டும்.

உங்கள் தாயின் உடல் நலக் குறைபாடு ஒன்றிற்காக பணத்தை செலவு செய்ய நேரலாம். இது உங்களுக்கு வருத்தத்தை உண்டாக்கும்.




இன்று உற்சாகமான நாள். இன்று முக்கியமான முடிவுகள் எடுப்பதற்கு முயற்சி எடுக்கலாம்.

உங்கள் கடின உழைப்பின் மூலமாக உங்கள் இயல் திறனை நிரூபித்துக் காட்டுவீர்கள். அர்ப்பணிப்புடன் பணி செய்து வெற்றி காண்பீர்கள்.

உங்களது கலகலப்பான அணுகுமுறை காரணமாக உங்கள் துணையை மகிழ்விப்பீர்கள். நல்லுறவை பராமரிப்பீர்கள்.

பண வரவு அதிகரித்து காணப்படும். தொலை தூரத்திலிருந்து பணம் வருவதற்கான வாய்ப்பு உள்ளது.

உங்களிடம் காணப்படும் தைரியம் காரணமாக உங்கள் மன நிலையும் உடல் நிலையும் ஆரோக்கியமாக இருக்கும்.




இன்று சற்று மந்தமான உணர்வுகள் காணப்படும். அதனை தவிர்த்தல் நலம். இன்று அதிக பணிகள் இருப்பதாக உணர்வீர்கள். கையாள கற்றுக் கொள்ளுங்கள்.

பலன்கள் உங்களுக்கு சாதகமாக அமைய நீங்கள் கடினமாக உழைக்க வேண்டும். திட்டமிட்டு பணியாற்றினால் வெற்றி கிடைக்கும்.

உங்கள் துணையிடம் கலகலப்பாக பழக வேண்டும். இதனால் ஆரோக்கியமான உறவு பராமரிக்கப்பட்டு நல்லுறவு மேம்படும்.

அதிக செலவினங்கள் காணப்படுகின்றது. பணம் இழக்காமலிருக்க சாதுர்யமாக திட்டமிட்டு செலவு செய்யுங்கள்.

உங்களுக்கு கண் எரிச்சல், முதுகுவலி மற்றும் கால் வலி ஏற்படலாம். பிரார்த்தனை மற்றும் மந்திரங்கள் ஜபிப்பதன் மூலம் இவற்றை தவிர்க்கலாம்.




இன்று அதிக பொறுப்பும் பதட்டமும் காணப்படும். விவேகமான, முறையான அணுகுமுறை மேற்கொள்வது சிறந்தது.

பணி நிமித்தமாக பயணம் ஏற்பட வாய்ப்புள்ளது. பணிச்சுமை காரணமாக பதட்ட உணர்வு ஏற்படலாம்.

குடும்ப பிரச்சினை ஒன்றின் காரணமாக உங்கள் துணையுடன் சில விரும்பத்தகாத தருணங்களை சந்திக்க நேரும்.

உங்கள் வீட்டின் சீரமைப்பிற்காகவும் புனர் நிர்மானத்திற்காகவும் பணம் செலவு எதிர்கொள்ள நேரும். இது உங்களுக்கு கவலையை ஏற்படுத்தும்.

இன்று ஆரோக்கியம் சுமாராக காணப்படும். தோல் சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் ஏற்படலாம்.




இன்று காணப்படும் சிறிய பிரச்சனைகளை கையாள கடின முயற்சி தேவை.

பணி வளர்ச்சியைப் பொருத்தவரை இன்று உகந்த நாள் அல்ல. இன்று பணிச்சுமை காணப்படும். பணியை திட்டமிட்டு ஆற்ற வேண்டும்.

இன்று மோதல்கள் ஏற்பட வாய்ப்புள்ளதால் உங்கள் துணையுடன் உரையாடும் போது கவனம் தேவை. எந்த விஷயத்தையும் இலேசாக எடுத்துக்கொள்ள வேண்டும்.

நிதி சம்பந்தமான முக்கிய முடிவுகள் இன்று எடுப்பதை தவிர்க்கவும். பெரிய முதலீடுகள் முயற்சி இன்று ஏற்புடையதல்ல.

இன்று பல்வலி அல்லது செரிமானம் போன்ற பிரச்சினைகள் ஏற்படலாம். ஆரோக்கியத்தில் கவனம் செலுத்த வேண்டியது அவசியம்.




இன்று அனைத்து விதத்திலும் முன்னேற்றம் காணப்படும். உங்களிடம் ஆற்றல் மற்றும் உறுதி காணப்படும். நீங்கள் வெற்றி பெறுவீர்கள்.

நீங்கள் சுறுசுறுப்பாக பணியாற்றுவீர்கள். குறைந்த நேரத்தில் விரைந்து பணிகளை ஆற்றுவீர்கள்.

உங்கள் துணையிடம் நேர்மையான அணுகுமுறை கொண்டிருப்பீர்கள். இதனால் உறவு ஆரோக்கியமாக இருக்கும்.

இன்று பண வரவு காணப்படும். நீங்கள் சம்பாதிக்கும் பணத்தை சேமிப்பீர்கள்.

இன்று ஆற்றல் நிறைந்து காணப்படுவீர்கள். ஆரோக்கியம் சீராக இருக்கும்.




உங்கள் செயல்களை சிறந்த முறையில் ஆற்றுவதற்கு உங்கள் திறமைகளை வளர்த்துக்கொள்ள வேண்டும். கடின உழைப்பு மற்றும் உறுதி மூலம் நீங்கள் வெற்றி பெறலாம்.

இன்று கடினமான வேலைகளையும் எளிதாக ஆற்ற முடியும். பணி நிமித்தமான பயணம் காணப்படும்.

உங்கள் துணையிடம் நேர்மையாக நடந்துகொள்வீர்கள். இதன் காரணமாக உங்கள் துணை உங்களை நன்கு புரிந்துகொள்வார்.

இன்று நிதிநிலை சிறப்பாக இருக்கும். உங்கள் வங்கியிருப்பு அதிகமாக காணப்படும். பங்கு வர்த்தகம் லாபகரமானதாக இருக்கும் என்பதால் அதில் பங்கு கொள்ளலாம்.

உங்களிடம் காணப்படும் புத்துணர்ச்சி காரணமாக இன்று ஆரோக்கியம் சிறப்பாக காணப்படும்.




நீங்கள் செய்த தவறுகளை இன்று சரி செய்ய வேண்டும். உங்கள் செயல்களை முறையாக ஏற்பாடு செய்து ஒரு கட்டுப்பாட்டோடு செய்யுங்கள்.

உங்கள் பணிகளை பொறுமையுடனும் உறுதியுடனும் ஆற்ற வேண்டும். பணியில் தவறுகள் ஏற்பட வாய்ப்புள்ளது.

உங்கள் பிரியமானவரின் வார்த்தைகள் உங்களை காயப்படுத்துவதாக உணர்ந்து சோர்வு கொள்வீர்கள். சகஜமாக அணுகுவது மகிழ்ச்சியான உறவிற்கு நல்லது.

இன்று செலவுகள் அதிகரிக்கக் காண்பீர்கள். அதற்கு தகுந்தாற்போல பணத்தை திட்டமிட்டு செலவு செய்ய வேண்டும்.

தேவையற்ற கவலைகள் மற்றும் தோல் எரிச்சல் காரணமாக நீங்கள் தூக்கத்தை இழப்பீர்கள்.

# இன்றைய ராசி பலன்கள் -08.10.2023




இன்று வெற்றி பெறுவதற்கு அதிக முயற்சி எடுக்க வேண்டும். திட்டமிடுதலும் முயற்சியும் இன்று மிகவும் தேவை.

அமைதியாக இறைவழிபாட்டில் ஈடுபட்டு உங்கள் பணிகளை ஆற்றுங்கள். அதனால் வெற்றியும் நல்ல பெயரும் கிடைக்கும்.

உங்கள் துணையிடம் உணர்ச்சிவசப்படாதீர்கள். நட்பாக அணுகி கலகலப்பாக பழகுங்கள்.

அஜாக்கிரதை காரணமாக பணத்தை இழக்க நேரலாம். இன்று சிறந்த முறையில் பணத்தை கையாள இயலாது.

காய்ச்சல் சம்பந்தமான உடல் உபாதைகள் ஏற்படலாம்.




உங்களிடம் போதிய தைரியம் காணப்படும். உங்கள் முயற்சிகள் நல்ல பலன்களை அளிக்கும். பயணம் மேற்கொள்வதற்கான வாய்ப்பு உள்ளது.

உங்கள் பணியும் மூலம் வெற்றி கிடைக்கும். உங்கள் ஆற்றல் உங்களுக்கு தெரிய வரும் நாள் இது. உங்களிடம் இன்று தன்னம்பிக்கை அதிகரித்து காணப்படும்.

நீங்கள் உங்கள் துணையுடன் அன்யோன்யமாய் இருப்பீர்கள். இருவரும் பொருத்தமான ஜோடியாக காணப்படுவீர்கள்.

பணப்புழக்கம் இன்று திருப்திகரமானதாக இருக்கும். உங்கள் கடின உழைப்பிற்கு ஊக்கத் தொகை மற்றும் சலுகை போன்ற கூடுதல் பணம் கிடைக்கும்.

இன்று ஆரோக்கியம் சிறப்புடன் காணப்படும். இன்று உறுதி மற்றும் புத்துணர்ச்சியுடன் காணப்படுவீர்கள்.




இன்றைய நாளை உங்களின் சுய மேம்பாட்டிற்காக பயன்படுத்திக் கொள்ளலாம். உங்கள் நண்பர்களின் ஆதரவு கிடைக்கும்.

இன்று பணிகள் விருப்பமானதாக இருக்கும். என்றாலும் வெற்றி பெறுவதற்கு கடினமாக உழைக்க வேண்டும்.

உங்களிடம் காணப்படும் புரிந்துணர்வு காரணமாக உங்கள் துணையுடன் நல்ல உறவை பராமரிப்பீர்கள்.

இன்று பணப்புழக்கம் மகிழ்ச்சிகரமானதாக இருக்கும். உங்கள் வங்கியிருப்பு அதிகரிக்க அது உதவும்.

நீங்கள் இன்று ஆரோக்கியமாக நம்பிக்கை உணர்வுடன் காணப்படுவீர்கள்.




நீங்கள் கடினமான பணிகளையும் எளிதாக செய்வீர்கள். என்றாலும் சிறந்த முறையில் திட்டமிட வேண்டும்.

பணியில் பொறுமை இழந்து காணப்படுவீர்கள். தொழில் சார்ந்த அணுகுமுறையால் பணிகளை சரிவர ஆற்ற இயலும்.

உங்கள் துணையிடம் உங்கள் கருத்துகளை வலியுறுத்துவீர்கள். நல்லுறவை பராமரிக்க இதனை தவிர்த்தல் நலம்.

பண வரவும் செலவும் காணப்படுகின்றது. எதிர் காலத்திற்காக பணத்தை சேமிக்க வேண்டும்.

உங்கள் சொந்த வளர்ச்சி குறித்த மனக் குழப்பம் காரணமாக பதட்ட உணர்வுடன் காணப்படுவீர்கள்.

OUR HISTORICAL ACHIEVEMENTS IN JAFFNA
- FACULTY OF BIO SYSTEM TECHNOLOGY UNI. OF JAFFNA - KILINOCHCHI
- CLINICAL TRAINING AND RESEARCH CENTRE FACULTY OF MEDICINE - JAFFNA
- FACULTY OF ENGINEERING UNIVERSITY OF JAFFNA
- COURT COMPLEX AT CHAVAKACHCHERI
- FACULTY OF AGRICULTURAL UNIVERSITY OF JAFFNA
- RDD OFFICE - JAFFNA
- WATER BOARD BUILDING - JAFFNA

Blue Ocean GROUP OF COMPANIES
20+ LOCATED CITIES | 235+ CONDO PROJECTS | 3500+ CONDO UNITS
KELSEY HOMES 40 Years Housing Excellence

S.Thumilan
Group Chairman
ACA, ACMA (UK), ACCA, CEMA, MCSI (UK), CPA (AUS), FMAAT (SL), ACS

CENTRALPAR JA-ELA
CENTRAL PARK
15 ACRES LARGEST GATED HOUSING DEVELOPMENT IN JA-ELA
HEAD OFFICE
No. 9A, De Fonseka Place, Bambalapitiya, Colombo 04.
Tel : +94 112 582 582 | Hotiline : +94 777 546 546
JAFFNA OFFICE
No. 21/1, Kerathivu Road, Navatkuli, Jaffna.
Mobile : +94 76 690 9949 | Mobile : +94 771 546 539

Northern PC Park

வடக்கின் கணினிப்பூங்கா
கணினி உலகில் நம்பகமான சேவையில் 15 வருடங்களுக்கு மேலாக யாழ் மண்ணில்
#10 Muddaskadai Junction, Stanley Road, Jaffna.
info@pcpark.co www.pcpark.co
Hot Line :- 077 777 1545
077 757 0124 | 075 555 7327 | 021 567 5566 | 021 222 9581
077 336 6443 | 071 777 2377 | 021 222 2050 | 021 222 0388
Northern Pc Park | Npcpark | northernpcpark | Northern PC Park

# ஹமாஸ் பயங்கரவாதிகள் தாக்குதல்: இஸ்ரேலுக்கு பிரதமர் மோடி ஆதரவு!





இஸ்ரேல் மீது ஹமாஸ் பயங்கரவாதிகள் தாக்குதல் நடத்தி வருகிறது. இந்த நிலையில், கடினமான இந்த நேரத்தில் இந்தியா இஸ்ரேலுக்கு ஆதரவாக உள்ளது என பிரதமர் மோடி தெரிவித்துள்ளார்.

இஸ்ரேல் மீது ஹமாஸ் பயங்கரவாதிகள் நேற்று திடீர் தாக்குதல்களை நடத்தி வருகின்றனர். ஹமாஸ் பயங்கரவாத அமைப்பைச் சேர்ந்த ஏராளமான இளைஞர்கள் 4 சக்கர வாகனங்களில் இஸ்ரேலுக்குள் நுழைந்து அங்கு கண்மூடித்தனமாக தாக்குதல் நடத்தி வருகின்றனர்.

ஒவ்வொரு இளைஞரும் கைகளில் நவீன ரக துப்பாக்கிகளை ஏந்தியவாறு சாலைகளில் சுற்றித் திரியும் வீடியோ காட்சிகள் வெளியாகி உள்ளன. அதோடு, ஏவுகணைகளைக் கொண்டும் ஹமாஸ் இயக்கத்தினர் இஸ்ரேலின் நிலைகளை குறிவைத்து தாக்குதல் நடத்தி வருவதாக செய்திகள் வெளியாகி உள்ளன.

ஹமாஸ் இயக்கத்தினரின் இந்த திடீர் தாக்குதலில் இஸ்ரேல் நாட்டைச் சேர்ந்த 22 பேர் உயிரிழந்துள் ளனர் என கூறப்படுகிறது. பலர் படுகாயமடைந்துள்ளனர்.

உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை மேலும் உயரக்கூடும் என அஞ்சப்படுகிறது. இஸ்ரேல் நாட்டைச் சேர்ந்த இளம் பெண் ஒருவரை ஹமாஸ் பயங்கரவாதிகள் கடத்திச் செல்லும் காட்சிகளும் சமூக ஊடகங்களில் வெளியாகி உள்ளது. பலர் உயிருக்கு அஞ்சி தங்கள் வீடுகளை விட்டு பாதுகாப்பான இடங்களுக்கு வாகனங்களில் அவசர அவசரமாகப் புறப்பட்டுள்ளனர்.

ஹமாஸ் பயங்கரவாதிகளின் இந்த தாக்குதலுக்கு உலகின் பல்வேறு நாடுகள் கண்டனம் தெரிவித்துள்ளன. பிரதமர் மோடியும் அதிர்ச்சி தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள சமூக வலைத்தள பதிவில், இஸ்ரேலில் பயங்கரவாதிகள் தாக்குதல் நடத்திய செய்தி அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. எங்கள் எண்ணங்களும் பிரார்த்தனைகளும் பாதிக்கப்பட்ட அப்பாவி மக்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினருடன் உள்ளன. இந்த கடினமான நேரத்தில் இஸ்ரேலுடன் நாங்கள் ஒற்றுமையாக நிற்கிறோம் என்று குறிப்பிட்டுள்ளார்.

# சகோதரத்துவ உணர்வோடு காவிரி நீரை பகிரவேண்டும்: கர்நாடக மேலவை குழுவினரிடம் தமிழிசை வலியுறுத்தல்

சகோதரத்துவ உணர்வோடு காவிரி நீரை பகிர்ந்துகொள்ள வேண்டும் என்று கர்நாடக மேலவை குழுவினரிடம் ஆளுநர் தமிழிசை சவுந்தரராஜன் வலியுறுத்தியுள்ளார்.

கர்நாடக சட்டப்பேரவைத் துணைத் தலைவர் எம்.கே.பிரானேஷ் தலைமையிலான சட்ட மேலவை உறுப்பினர்கள் 6 பேர் மற்றும் அதிகாரிகள் 4 பேர் அடங்கிய குழுவினர் உத்தியோகபூர்வ விஜயமாக புதுச்சேரிக்கு சென்றுள்ளனர்.

இந்தக் குழுவினர் துணைநிலை ஆளுநர் மாளிகையில் ஆளுநர் தமிழிசை சவுந்தரராஜனை நேற்று மரியாதை நிமித்தமாக சந்தித்து பேசினர்.

அப்போது, இந்தியாவில் அனைவரும் சகோதரத்துவத்தோடு வாழ்ந்து வருகிறோம். காவிரி நதிநீர்ப் பகிர்வு பிரச்சினையிலும் சகோதரத்துவ உணர்வோடு பொறுப்புடன் செயல்பட்டு காவிரி நீரைப் பகிர்ந்து கொள்ள வேண்டும் என்று ஆளுநர் தமிழிசை வலியுறுத்தியுள்ளார்.



தமிழ் இலக்கியங்களில் காவிரி நதி கரைபுரண்டு ஓடும் அழகும் மீன்கள் துள்ளி விளையாடும் அழகும் சொல்லப்பட்டிருக்கிறது என்றும் காவிரி நதிநீர் பாசனத்தின் மூலம் யானை கட்டி போரடிக்கும் அளவுக்கு தஞ்சாவூர் தமிழகத்தின் நெற்களஞ்சியமாக சிறப்புடன் விளங்கியது எனவும் எடுத்துக் கூறினார்.

இதன் பின்னர் அந்த குழுவினர் சட்டப்பேரவையில் முதல்வர் ரங்கசாமியை சந்தித்து பேசினர்.

அப்போது சட்டப்பேரவையில் உள்ள நிலைக்குழுக்கள், அவற்றின் அதிகாரங்கள், அவை செயல்படும் விதங்கள் குறித்தும் புதுச்சேரியில் செயல்படுத்தப்படும் நலத்திட்டங்கள் குறித்தும் கேட்டறிந்தனர்.

# வறட்சியினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம்!

கர்நாடகாவின் வறட்சியினால் பாதிக்கப்பட்ட பகுதிகளின் நிலை குறித்து மத்திய குழு ஆய்வு நடத்தி வருகின்றது.

கர்நாடக மாநிலத்தில் மொத்தமுள்ள 236 வட்டங்களில் 195 வட்டங்கள் வறட்சியினால் பாதிக்கப்பட்டுள்ளன.

இந்த நிலையில் இந்த பகுதிகளை மத்திய அரசு ஆய்வு செய்து விவசாயிகளுக்கு வறட்சி நிவாரணம் வழங்க வேண்டும எனவும் இதற்காக மத்திய நிபுணர் குழுவை கர்நாடகாவுக்கு அனுப்ப வேண்டும் என்றும் தெரிவித்து கர்நாடக முதல்வர் சித்தராமையர் பிரதமர் நரேந்திர மோடிக்கு கடிதம் அனுப்பியுள்ளார்.

இதை ஏற்றுக்கொண்ட மத்திய அரசு கர்நாடகாவின் வறட்சி நிலையை ஆய்வு செய்ய மத்திய விவசாயத்துறை இணைச் செயலாளர் அஜித்குமார் சாஹூ தலைமையில் 10 பேர் அடங்கிய நிபுணர் குழுவை கர்நாடகாவுக்கு அனுப்பியுள்ளது.

# இஸ்ரேல் இராணுவம் நடத்திய தாக்குதலில் காஸாவில் 198 பாலஸ்தீனியர்கள் உயிரிழப்பு



ஹமாஸ் பயங்கரவாதிகள் தாக்குதலால் இஸ்ரேலில் 100 பேர் வரை உயிரிழந்துள்ளனர்.

அதேபோல் காசா பகுதியில் இஸ்ரேல் இராணுவம் நடத்திய தாக்குதலில் 198 பாலஸ்தீனியர்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

இஸ்ரேல் மீது ஹமாஸ் பயங்கரவாதிகள் நேற்று காலை முதல் திடீர் தாக்குதல்களை நடத்தி வருகின்றனர்.

ஹமாஸ் பயங்கரவாத அமைப்பைச் சேர்ந்த ஏராளமான இளைஞர்கள் நான்கு சக்கர வாகனங்களில் இஸ்ரேலுக்குள் நுழைந்து அங்கு கண்மூடித்தனமாக தாக்குதல் நடத்தி வருகின்றனர். ஒவ்வொரு இளைஞரும் கைகளில் நவீன ரக துப்பாக்கிகளை ஏந்தியவாறு வீதிகளில் சுற்றித் திரியும் வீடியோ காட்சிகள் வெளியாகி உள்ளன.

அதோடு, ஏவுகணைகளைக் கொண்டும் ஹமாஸ் இயக்கத்தினர் இஸ்ரேலின் நிலைகளை குறிவைத்து தாக்குதல் நடத்தி வருகிறது என செய்திகள் வெளியாகி உள்ளன.

நேற்று காலை 8 மணி தொடங்கி 2 மணி நேரத்தில் இஸ்ரேல் முழுவதும் பல பகுதிகளிலும் ஏவுகணைகள் துளைத்தெடுத்தன. சற்றும் எதிர்பாராத இந்தத் தாக்குதலால் மக்கள் அதிர்ச்சிக்கு உள்ளான சூழலில் ஹமாஸ் பயங்கரவாதிகள் இஸ்ரேலுக்குள் நுழைந்தனர்.

ஹமாஸ் பயங்கரவாதிகள் தாக்குதலால் இஸ்ரேலில் 100 பேர் வரை உயிரிழந்துள்ளனர் என அந்த நாட்டு அரசாங்கம் தெரிவித்துள்ளது.

மேலும் இராணுவ வீரர்களையும், பொதுமக்களையும் ஹமாஸ் பயங்கரவாதிகள் சிறைபிடித்துள்ளனர் என்றும் தெரிவித்துள்ளது.

இதனிடையே, ஹமாஸ் பயங்கரவாதிகள் தாக்குதலை எதிர்கொள்ளும் வகையில் இஸ்ரேல் படையினரும் பதில்





தாக்குதலில் ஈடுபட்டு வருகின்றனர். காசா பகுதியில் இஸ்ரேல் ராணுவம் நடத்திய தாக்குதலில் 198 பாலஸ்தீனியர்கள் கொல்லப்பட்டுள்ளனர். மேலும் ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்துள்ளனர் எனத் தகவல் வெளியாகியுள்ளது.

இஸ்ரேல் – பாலஸ்தீனத்துக்கு இடையே தன்னாட்சி பெற்ற பகுதியாக காசா முனை பகுதி உள்ளது. இந்தப் பகுதி ஹமாஸ் போராளிகளின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ளது. இந்த அமைப்பை பயங்கரவாத இயக்கமாக இஸ்ரேல் கருதுகிறது.

அந்த அமைப்புத்தான் பாலஸ்தீனத்துக்கு ஆதரவாக இஸ்ரேல் மீது தொடர் தாக்குதல்களை நடத்தி வருகிறது என்பது இஸ்ரேலின் நீண்ட கால குற்றச்சாட்டு. ஹமாஸுக்கு தேவையான நிதி உதவிகளை ஈரான் செய்து வருவதாகவும் இஸ்ரேல் கூறிவருகிறது.

இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாஹு கூறுகையில், நாங்கள் யுத்தம் செய்கிறோம். அதில் நாங்களே வெல்வோம். எங்களின் எதிரி யோசித்துப் பார்த்திராத விலையைக் கொடுக்க நேரிடும் என்று கூறியுள்ளார்.

இதற்கிடையில், ஹமாஸ் அமைப்பு ஆயிரக்கணக்கான ஏவுகணைகள் கொண்டு தாக்குதல் நடத்தியதாக ஒப்புக் கொண்டுள்ளது. மேலும், இஸ்ரேல் நாட்டு வீரர்களை பிணையாகப் பிடித்து வைத்துள்ளதாகவும் கூறியது. சனிக்கிழமை மதியம் வரை பொதுமக்களில் 22 பேர் உயிரிழந்ததாக இஸ்ரேல் நாட்டின் மருத்துவமனைகளில் இருந்து கிடைக்கப்பெற்ற தகவல்கள் உறுதி செய்துள்ளது.

பாலஸ்தீனத்துக்குள் அத்துமீறி குடியேறுபவர்களுக்கு எதிராகவும், பாலஸ்தீனத்தை ஆக்கிரமிக்கும் துருப்புகளின் பயங்கரவாதத்துக்கு எதிராகவும் தங்களை தற்காத்துக் கொள்ளும் உரிமை என்பது பாலஸ்தீனியர்களுக்கு உண்டு என்று பாலஸ்தீன ஜனாதிபதி மஹ்மூத் அப்பாஸ் கூறியுள்ளார் என செய்தி நிறுவனம் ஒன்று தெரிவித்துள்ளது.

இந்தத் தாக்குதலை அடுத்து பாலஸ்தீன ஜனாதிபதி மஹ்மூத் அப்பாஸ், உயர் அதிகாரிகளுடன் அவசர ஆலோசனை மேற்கொண்டுள்ளார் எனவும் அதில் பாலஸ்தீன மக்களுக்கு பாதுகாப்பு வழங்கவும், பாலஸ்தீன மக்களின் உறுதியை வலுப்படுத்தத் தேவையான அனைத்து நடவடிக்கைகளை எடுக்கவும் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளார் என்றும் செய்தி வெளியாகி உள்ளது.